## பொதுத்தமிழ்-பகுதி-இ-தமிழ் அறிஞர்களும், தமிழ் தொண்டும்

## அலகு – 9

## உரைநடை

### 1. மறைமலை அடிகள்

சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிக்கு நேர்காணலுக்குச் சென்றார்ஒருவர். அந்தக்கல்லூரியின்பேராசிரியர் பரிதிமாற்கலைஞர், "குற்றியலுகரத் திற்கு எடுத்துக்காட்டுச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அவர் "அஃது எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். 'நீங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டீர்கள்' என்றார் பரிதிமாற்கலைஞர். 'தெரியாது' என்று சொன்னவரை, "எப்படித் தேர்வு செய்யலாம்?" என்று பிறர் கேட்டபோது, 'அஃது' என்பது ஆய்தத் தொடர் குற்றியலுகரம், 'எனக்கு' என்பது வன்தொடர்க் குற்றியலுகரம், 'தெரியாது' என்பது உயிர்த்தொடர் குற்றியலுகரம் என்று விளக்கினார் பரிதிமாற்கலைஞர். இந்நிகழ்வில் பரிதிமாற்கலைஞரையே வியக்க வைத்தவர் மறைமலையடிகள்.

பரிதிமாற்கலைஞருடனான அவருடனான நட்பு 'தனித்தமிழ்' மீதான அடிகளாரின் பற்றை மிகுதியாக்கியது. பிறமொழிக் கலப்பு இன்றி இனிய, எளிய தமிழ்ச் சொற்களைக் கொண்டே பேசவும் எழுதவும் இயலும் என்று நடைமுறைப்படுத்தினார். 'சுவாமி வேதாசலம்' எனும் தன்பெயரை 'மறைமலையடிகள்' என மாற்றிக்கொண்டதோடு தம் மக்களின் பெயரையும் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றினார். இளம்வயதில் பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் எழுதிவந்த அடிகளார் ஞானசாகரம் (1902), Oriental Mystic Myna (1908), Ocean Of Wisdom (1935) முதலான இதழ்களை நடத்திச் சிறந்த இதழாளராகத் திகழ்ந்தார். முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதலான பல நூல்களை எழுதியுள்ளார் . முறையான பள்ளிக்கல்வியை முடித்திராத மறைமலையடிகள் ஆக்கிய நூல்களும் ஆற்றிய சொற்பொழிவுகளும் அவர் ஓர் அறிவுக்கடல் என்பதை நமக்கு உணர்த்தும்.

## 2. பரிதிமாற் கலைஞர்

### உயர்தனிச் செம்மொழி

### பரிதிமாற் கலைஞர்

### வி.கோ. சூரியநாராயண சாத்திரியார்

தொன்று தொட்டுத் தமிழ் மொழி இயல் இசை நாடகம் என்னும் மூன்று பிரிவுகளையுடைய தென்று பலருங் கூறுகின்றனர். அம்மூவகைப் பாகுபாடுகளின் இயல்புகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

இயற்றமிழென்பது தமிழர் யாவர்மாட்டும் பொதுமையின் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமுஞ் செய்யுளுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண் இலக்கியங்களும் இலக்கணங்களுமாகிய யாவுமடங்குமென்க. எனவே இயற்றமிழ், 'செந்தமிழ் கொடுந்தமிழ்' என்ற வகையிலும் படுதலுமொக்கும். ஒப்பவே, செந்தமிழ் வசனநூல்களும் செந்தமிழ்ச் செய்யுணூல்களும், கொடுந்தமிழ் வசனநூல்களும் கொடுந்தமிழ் செய்யுணூல்களும், இவ்வியற்றமிழின் கண் அடங்குமென்பது தானே விளங்கும். தமிழிற் புலவரும் அல்லாரும் ஒத்தியங்காமையான், இப்பிரிவிற்கு இடமுண்டாயிற்று. தமிழ் வழங்கும் நாட்டிற்குள்ளும் இப்பிரிவு ஏற்படுவதாயிற்று.

“செந்தமிழ் நாடே

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்

சௌந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்

சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கும்

மங்கலப் பாண்டி வளநா டென்ப”

என்ற சூத்திரத்தாற் செந்தமிழ் நாடு இன்னதென்பது அறிக. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு குறுநிலங்களுங் கொடுந்தமிழ் நாட்டின்பாற்பட்டன.

“தென்பாண்டி குட்டங் குடற்கற்கா வேண்பூழி

பன்றியருவா வதன்வடக்கு – நன்றாய

சீதமலாடு புனனாடு செந்தமிழ்சேர்

ஏதமில் பன்னிரு நாட் டெண்."

என்ற பழைய வெண்பாவினாற் கொடுந்தமிழ் நாடு இன்னதென்பது அறிக.

இசைத் தமிழென்பது, பண்ணொடு கலந்துந் தாளத்தொடு கூடியுமியங்குஞ் செந்தமிழ்ப் பாட்டுக்களானுங் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களானு மியன்ற இலக்கியங்களும் அவற்றினிலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண், கீர்த்தனங்களும் வரிப்பாட்டுகளும் சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்பாங்கு முதலியனவும் அடங்குமென்க. இயற்றமிழின்கண் வழங்குஞ் சொற்களுஞ் சொற்றொடர்களுமின்றி இசைத் தமிழெங்ஙனம் இயங்க முடியுமோ? அன்றியும் இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசையெடுத்துத் தாளமறுத்துப் பாடப்படின், அவை இசைத்தமிழின்பாற்படும். இராகத்தொடுமட்டில் இயைத்துப் பாடப்படும் பாடல்கள் இயற்றமிழின்பாற் பட்டனவாக மதிக்கப்படுமேயன்றிப் பிறிதில்லை. தாளமும் உடன் கூடிய வழியே அவை இசைத் தமிழின்பாற் படுமென்க. முற்காலத்து வழங்கிய 'பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், தாளவகையோத்து' முதலியனவும் இடைக்காலத்துத் தோன்றிய 'தேவாரம்' முதலியனவும் இக்காலத்து வெளிப்பட்டுலவுகின்ற 'கந்தபுராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை, சங்கீத சந்திரிகை' முதலியனவுமாகிய யாவையும் இசைத்தமிழாம். இவ்விசைத்தமிழ், நாடகத்தமிழ்க்கு முன்னர்த் தோன்றினமைபற்றி முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும் இவ்விசைத் தமிழே நாடகத்தமிழிற்குச் சிறப்பும் விளக்கமும் தந்து நிற்பதாம். இசைத்தமிழில்வழி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை; ஆடையற்ற நங்கை வெளிப்படாதவாறு போல, இசையற்ற நாடகத் தமிழும் வெளிப்படுதலின்றி உள்ளடங்கியேயிருத்தல் வேண்டும். எனவே நாடகத் தமிழிற்கு இசைத் தமிழும் இன்றியமையாச் சிறப்பினவாம். ஏன்? இயற்றமிழும் இசைத்தமிழுங் கூடியவழியே நாடகத்தமிழ் பிறக்குமென்று கூறுதலே அமைவுடைத்தாம்.

நாடகத்தமிழென்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசமில்லாத வேலைக்காரார்களுக்கும் படிக்கத் தெரியாதவர்களுக்கும், நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது; அது கேட்போர்க்குங் காண்போர்க்கும் இன்பம் பயவாவிடின், சாமானிய சனங்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின் அஃது

இன்பச் சுவையோடியல்வதாயிற்று. உலகத்தினியல்பினை உள்ளதை யுள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத் தமிழேயன்றி வேறில்லை. இயற்றமிழும் இசைத்தமிழுஞ் சேர்ந்த வழியே நாடகத்தமிழ் பிறந்ததெனினும் நாடகத்தமிழிற்கு வேறு தனிப்பெருஞ் சிறப்புள்ளது. முன்னையன இரண்டும் கேள்வியின்பம் மட்டிலே பயப்பனவாய் நிற்கின்றன. இவ்விரண்டனடியாகப் பிறந்த நாடகத் தமிழோ கேள்வியின்பம் பயப்பதேயன்றிக் காட்சி யின்பமும் உடன்பயக்கின்றது. இச்சிறப்புப் பற்றியே பிற நாடுகளிலுள்ள பிறபாஷைப் புலவர்கள் நாடகங்களை மிக்க மேன்மையுடையனவாக மதிக்கின்றனர்.

இக்காலத்தில் ஆங்கிலபாஷை கற்ற தமிழ்மக்களிற் பலர் தமது தாய்மொழியாகிய தமிழைப் படிக்க வேண்டுவது அவசியமன்றென்றும் தமக்கு வேண்டிய விஷயங்கள்யாவும் ஆங்கிலத்திலேயே அகப்படுகின்றனவென்றும் பலதிறப்படக் கூறுவர். அவர் ஆங்கில மொழிச் சிறப்பு மட்டிற் கூறியமைவதே நன்றாகுமன்றித் தமிழ் கற்க வேண்டியது அவசியமன்று என்பது அறியாமையொடு கூடிய துணிந்துரையாம்.

இது *சுதேசாபிமானமும் சுபாஷாபிமானமும் அற்றவர் கூற்றாம். இவ்விரண்டும் மிக்க ஆங்கிலர் இவ்விரண்டும் அற்றவர்களை எவ்வாறு மதிப்பாரோ? ஆங்கிலம் முதலிய பிறபாஷைக்குரியராய் அப்பாஷைகள் வல்லுநரெல்லாம் தமிழ் மொழியின்மீதார்வமுடையராய்த் தமிழைக் கற்றும் தமிழ் நூல்களைத் தங்கள் பாஷைகளில் மொழிபெயர்த்துங் கொள்ளுதலை உற்று நோக்கியாதல் தமிழ்க்கல்வி அவசியமன்று என்பார்க்குப் புத்திவரட்டும்.

பாஷையறிவு பிறிதொரு பயனுக்குக் கருவியாகுமேயன்றி, அதுதானே பயனாகாது. பாஷையறிவே பயனெனக் கருதி, அதன்கண் இன்பங்காண்பாருமுளர். சபைகளிலாவது சம்பாஷணைகளிலாவது சாதுரியமாகப் பேசுவோர் பாஷையறிவுடையாரேயன்றிச் சாஸ்திரக் கல்வியுடையரல்லர். சாஸ்திரக் கல்வியுடையார் எங்கே போனாலுந் தங்கள் கடையை விரிக்கப் புகுவாரேயன்றி வேறன்று. சாஸ்திரக் கல்வியுடையார்க்குப் பாஷையறிவும் இன்றியமையாததே. தங்கள் கருத்துக்களால் உலகமனைத்தினும் இன்பவுணர்ச்சி யெழுப்ப வல்ல நல்லிசைப்

புலவர்கள் செய்த பாமுறைகளைப் படித்தலானுண்டாகும் பயன் அளவிடற் பாலதன்று; மக்களிடத்தில் அடங்கிக் கிடக்கும் மனோவிகாரங்களை எழுப்பிச் சுவை பயக்கும்.

இனியிது நிற்க. தமிழ் நாட்டில் ஆங்கிலவரசாட்சி யேற்பட்ட பின்னர்த் தாய்மொழியாகிய தமிழை அதன் வழிமொழிகளாகிய தெலுங்கு, கன்னட, மலையாள துளுவங்களோடு அடக்கி 'உண்ணாட்டு மொழிகள்' என வகைப்படுத்தினர் சிலர். தனிமொழி யொன்றை அதன் வழிமொழிகளோடு வகைப்படுத்தலாமோ ? அது முன்னதனை இழிவு படுத்த தாகாதோ? ஆரிய மொழிகளுள் தலைநின்ற வடமொழியை அதன் *பாகதங்களோடு ஒருங்குவைத்து எண்ணத் துணியாமைபோலத் தமிழ் மொழியையும் அதன் வழிமொழிகளோடு ஒருங்குவைத்தெண்ணத் துணியாதிருத்தலே அமைவுடைத்தாம். இவ்வாறாகவும் நமது சென்னைச் சர்வகலாசாலையார் மேற்கூறியாங்கு, தமிழை இழிவுபடுத்தி வகுத்த போதே, தமிழராயினார் முற்புகுந்து அவ்வாறு வகைப்படுத்தல் சாலாதென மறுத்திருக்க வேண்டும்.

அப்போழ்தெல்லாம் வாய்வாளாமை மேற்கொண்டிருந்துவிட்டனர் தமிழ்மொழியாளர்.

வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ் மொழியும் 'உயர்தனிச் செம்மொழி' யாமாறு சிறிது காட்டுவாம். தான் வழங்கும் நாட்டின்கணுள்ள பல மொழிகட்குந் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே 'உயர் மொழி', இவ்விலக்கணத்தான் ஆராயுமிடத்துத் தமிழ், தெலுங்கு முதலியவற்றிற் கெல்லாந் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவும் உடைமையால் தானும் உயர்மொழியே யென்க.

தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே 'தனிமொழி' எனப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யும் உதவி மிகுந்தும் அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ்மொழியினுதவி களையப்படின், தெலுங்கு முதலியன இயங்குத லொல்லா; மற்றுத் தமிழ்மொழி அவற்றினுதவியில்லாமலே சிறிது மிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையின் இயங்கவல்லது. இஃது இந்திய மொழி

நூற்புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின் தமிழ் தனிமொழியே யென்க. இனி செம்மொழியாவது யாது ?

திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் 'செம்மொழி' யாம் என்பது இலக்கணம். இம்மொழிநூலிலக்கணம் தமிழ் மொழியின்கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன்முடிபுகளும் பொருண்முடிபுகளு மின்றிச் *சொற்றான் கருதிய பொருளைக் *கேட்டான் தெள்ளிதினுணர வல்லதாய்ப் பழையன கழிந்தும் புதியன புகுந்தும் திருத்த மெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ்மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க.

நாட்டின் நாகரீக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைகளும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிற பாஷைச் சொற்களன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ் மொழிக்குப் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய் மொழியுமாம். எனவே, தமிழ் செம்மொழியென்பது திண்ணம். இதுபற்றியன்றே தொன்றுதொட்டுத் தமிழ்மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே தென்னாட்டின்கட் சிறந்தொளிராநின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும், 'உயர்தனித் செம்மொழி' யேயாம் என்பது நிச்சயம். இவ்வளவுயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோடொருங்கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர் தனிச்செம்மொழி சமஸ்கிருத மெனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர் தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம்.

(கட்டுரை எழுதப்பட்டு நூறாண்டுகட்டு மேலாயின. அக்கால நடைவழக்குப்படி நூலாசிரியர், பாஷை என்றும் சம்பாஷைணை என்றும் வட சொற்கலந்து எழுதலாயினர்.)

## 3. நா.மு. வேங்கடசாமி நாட்டார்

இயற்பெயர் : சிவப்பிரகாசம்

பெற்றோர் : முத்துச்சாமி நாட்டார் – தைலம்மை

காலம் : 12.04.1884 – 1944

பிறந்த ஊர் : நடுக்காவேரி, தஞ்சாவூர் மாவட்டம்

### கல்வி

திண்ணைப் பள்ளியில் நான்காம் வகுப்பு வரை படித்தார். பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்ற பின் சட்டம் பயின்றார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்காலத்தில் 'பிரவேச பண்டிதம்', 'பால பண்டிதம்', 'பண்டிதம்' என்னும் மூன்று தேர்வுகளை நடத்தி வந்தது. ஆறு ஆண்டுகள் படித்து தேர்வு எழுத வேண்டிய அம்மூன்று தேர்வுகளையும் ந.மு. வேங்கடசாமி நாட்டார் மூன்றே ஆண்டுகளில் அதாவது 1905, 06, 07 ஆண்டுகளில் எழுதி தேர்ச்சி பெற்றார்.

இத்தேர்வுகளுக்குப் பிறகு 'பண்டிதர்' என்ற பட்டத்தைப் பெற்றார்.

1940இல் சென்னை மாகாணத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் நாட்டாருக்கு 'நாவலர்' என்ற சிறப்பு பட்டம் அளிக்கப்பட்டது.

### படைப்புகள்

1. கபிலர்
2. கண்ணகி வரலாறு
3. சோழர் சரித்திரம்
4. நக்கீரர்
5. வேளிர் வரலாறு
6. கள்ளர் சரித்திரம்
7. கற்பும் மாண்பும்
8. கட்டுரைத் திரட்டு

**உரைநூல்கள்**

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, வெற்றி வேற்கைஈ மூதுரை, நல்வழி நன்னெறி, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவிளையாடற் புராணம், யாப்பெருங்காலக்காரிகை, தண்டியலங்காரம், அகத்தியர் தேவாரத் திரட்டு ஆகிய நூல்களுக்கு உரை எழுதி ‘உரை வேந்தர்’ என்ற பட்டத்தைப் பெற்றார்.

**மறைவு**

- 1944 இல் ந.மு.வே நாட்டாருக்கு மணிவிழா கொண்டாடுவதென செயற்குழுவினர் முற்பட்ட போது எதிர்பாராத நிலையில் இவர் திடீரென காலமானர்.
- இவருக்கு சமாதி வைக்கப்பட்ட இடத்தில் ஒரு கற்கோயில் எழுப்பப்பட்டது. தமிழ்ப் புலவர் ஒருவர் மறைந்த இடத்தில் கற்கோயில் எழுப்பப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- இவருக்கு தமிழகம் முழுவதும் இரங்கல் கூட்டங்கள் நடைபெற்றன.
- இவரது நூற்றாண்டு விழாவை 22.04.1984 இல் தமிழக அரசு தஞ்சையில் கொண்டாடியது.

**4. இரா.பி.சேது**

**கப்பலோட்டிய தமிழர்**

‘தென்னாட்டுத் துறைமுகமே! முந்நூறு ஆண்டுகளாக நீயே இம்முத்துக் கரையில் முதன்மை பெற்று விளங்குகின்றாய்! முன்னாளில் வளமுற்றிருந்த கொற்கைப் பெருந்துறையின் வழித்தோன்றல் நீயே என்று உணர்ந்து உன்னை வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன். ஆயினும், அக்காலத் துறைமுகத்தின் மாட்சியையும் இக்காலத்தில் காணும் காட்சியையும் நினைத்துப் பார்க்கும் பொழுது என் நெஞ்சம் குமுறுகின்றதே!

பார் அறிந்த கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீனக்கொடி உயர்ந்து பறந்தது. கொற்கைக்கடல் முத்துவளம் கொழித்தது. பழங்குடிகளாகிய பரதவர்

மரக்கல வணிகத்தால் வளம்பெற்று மாடமாளிகையில் வாழ்ந்தார்கள். இது, சென்ற காலத்தின் சிறப்பு. இன்று, மீனக்கொடி எங்கே? ஆங்கில நாட்டுக் கொடியன்றோ இங்குப் பறக்கின்றது? பரங்கியர் கப்பலன்றோ எங்கும் பறந்து திரிகின்றது? கொள்ளை இலாபம் அடைகின்ற வெள்ளையர் கப்பலில், கூலி வேலை செய்கின்றனர் நம் நாட்டு மக்கள்! சொந்த நாட்டிலே வந்தவருக்கு அடிமைசெய்து வயிறு வளர்ப்பது ஒரு வாழ்வாகுமா? வசையொழிய வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவர் வாய்மொழியை மறக்கலாமா?

வளமார்ந்த துறைமுகமே! இந்த வசையை ஒழிப்பதற்காக இந்நகரில் சுதேசக் கப்பல் கம்பெனி ஒன்று உருவாயிற்று. பாரதநாட்டுச் செல்வரும் அறிஞரும் அந்தக் கம்பெனியில் பங்குகொண்டார்கள். பழங்காலப் பாண்டியரைப் போல் மதுரை மாநகரிலே தமிழ்ச் சங்கம் அமைத்துப் புலவர் பாடும் புகழ் உடையவராய் விளங்கிய பாண்டித்துரையார் அக்கம்பெனியின் தலைவர் ஆயினார். அதன் செயலாளனாக அமைந்து பணி செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. கம்பெனியார் வாங்கிய சுதேசக் கப்பல் உன் துறைமுகத்தை வந்தடைந்தது. வெள்ளோட்டம் பார்ப்பதற்காக அக்கப்பல் இங்கிருந்து கொழும்புத் துறையை நோக்கிப் புறப்பட்ட நாளில், இன்ப வெள்ளம் என் உள்ளத்திலே பொங்கி எழுந்தது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

வாணிக மாமணியே! அன்றுமுதல் சுதேசக் கப்பல் வாணிகம் வளர்ந்தது; வெள்ளையர் வாணிகம் தளர்ந்தது. அதுகண்டு அவர் உள்ளம் எரிந்தது. வெறுக்கத்தக்க சூழ்ச்சிகளை அன்னார் கையாளத் தலைப்பட்டனர்; சுதேசக் கம்பெனி வேலையினின்றும் நான் விலகிக்கொண்டால் நூறாயிரம் ரூபாய் கையடக்கம் தருவதாக மறைமுகமாகக் கூறினர். எனக்கு உற்ற துணையாக நின்று ஊக்கம் தந்த நண்பர்களைப் பலவாறு பயமுறுத்தினர்; இவையெல்லாம் பயனற்று ஒழிந்த நிலையிலே அடக்குமுறையைக் கையாளக் கருதி அரசாங்கத்தின் உதவியை நாடினர்.

பரங்கியர் ஆளும் துறையே! ஆங்கில அரசாங்கம் சர்வ வல்லமையுடையது என்றும், அதை அசைக்க எவராலும் ஆகாதென்றும் அப்போது பொதுமக்கள் எண்ணியிருந்தார்கள். அதனால் அடிமைத்தனம் நாளொரு மேனியும்

பொழுதொரு வண்ணமுமாக இந்நாட்டு மக்களிடையே வளர்ந்தது. துரைத்தனத்தார் என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசாமல், 'சார், சார்' என்று சலாமிட்டும், 'புத்தி, புத்தி' என்று வாய் பொத்திச் 'சரி, சரி' எனச் சம்மதித்துத் தாளம் போடும் போலி அறிஞர்கள், பட்டங்களும் பதவிகளும் பெற்று உயர்ந்தார்கள். அரசாங்கம் ஆட்டுவித்தால் அப்பதுமைகள் ஆடும்; எப்போதும், 'அரசு வாழ்க' என்று பாடும். இத்தகைய சூழ்நிலையிலே எழுந்தது சுதந்தர நாதம்!

வந்தே மாதரம் என்ற சுதேச மந்திரம் வங்க நாட்டிலே பிறந்தது; காட்டுக்கனல் போல் எங்கும் பரவிற்று. சுதந்தரம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன் என்று வடநாட்டிலே மார்தட்டி நின்றார் மராட்டிய வீரர் ஒருவர். அவரே பாரதநாடு போற்றும் பாலகங்காதர திலகர். தென்னாட்டிலே தோன்றினார் நாவீறுடைய நண்பர் பாரதியார். அவர் அஞ்சாத நெஞ்சினர். செஞ்சொற்கவிஞர்; வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம் என்று அழகிய பாட்டிசைத்து, நாட்டிலே ஆர்வத்தைத் தட்டி எழுப்பினார்.

புதுமைகண்ட துறைமுகமே! அந்நாளில் 'வந்தேமாதரம்' என்றால் வந்தது தொல்லை. அந்த வாசகத்தில் ஒரு வஞ்சகம் இருப்பதாக ஆங்கில அரசாங்கம் கருதிற்று. பொதுக்கூட்டங்களிலும் தொழிலாளர் கூட்டங்களிலும் நான் பேசும்பொழுது

'வந்தே மாதர'த்தை அழுத்தமாகச் சொல்வது வழக்கம். அதைக்கேட்டு நாட்டு மக்கள் ஊக்கமுற்றார்கள்; உணர்ச்சி பெற்றார்கள். உள்ளதைச் சொன்னால் கள்ளமுடையவர் உள்ளம் எரியும் அல்லவா? எரிவுற்ற அரசாங்கம் என்னை எதிரியாகக் கருதிற்று; என் மீது பல வகையான குற்றம் சாட்டிற்று. நாட்டின் அமைதியை நான் கெடுத்தேனாம்! நல்ல முதலாளிமாருக்குத் தொல்லை கொடுத்தேனாம்! வெள்ளையர் மீது வெறுப்பை ஊட்டினேனாம்! வீரசுதந்திரம் பெற வழிகாட்டினேனாம்!

வெள்ளையர் கோர்ட்டிலே இக்குற்ற விசாரணை விறுவிறுப்பாக நடந்தது. இரட்டைத் தீவாந்தர தண்டனை எனக்கு விதிக்கப்பட்டது. அப்பீல் கோர்ட்டிலே சிறைத் தண்டனையாக மாறிற்று அத்தீர்ப்பு. ஆறாண்டு கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலும் கொடும்பணி செய்தேன். என் உடல் சலித்தது.

ஆயினும், உள்ளம் ஒருநாளும் தளர்ந்ததில்லை; சிறைச்சாலையை தவச்சாலையாக நான் கருதினேன்; கைவருந்த மெய் வருத்தச் செய்த பணிகள் எல்லாம் தாய்நாட்டின் விடுதலைக்காகப் புரிந்த அருந்தவம் என்று எண்ணி உள்ளம் மகிழ்ந்தேன்.

செல்வச் செழுந்துறையே! சிறைச்சாலையில் என்னைக் கண்காணித்தவர் பலர். கடும்பணி இட்டவர் பலர். அவரை நான் எந்நாளும் வெறுத்ததில்லை. ஆனால், முறைதவறி நடந்தவர்களை எதிர்த்தேன். வரைதவறிப் பேசியவர்களை வாயால் அடக்கினேன்.

ஒரு நாள் மாலைப்பொழுது; உடல் நலிந்து, உள்ளம் தளர்ந்து சிறைக்கூடத்தில் உட்கார்ந்திருந்தேன். அங்கே வந்தான் ஒரு ஜெயிலர்; அதிகாரத் தோரணையில் நீட்டி நிமிர்ந்து நின்றுகொண்டு எனக்குச் சில புத்திமதிகளைச் சொல்லத் தொடங்கினான். அப்போது என் மனத்தில் கோபம் பொங்கி எழுந்தது. 'அடே மடையா! நீயா எனக்குப் புத்திமதி சொல்பவன்? மூடு வாயை! உனக்கும் உன் அப்பனுக்கும் புத்தி சொல்வேன் நான். உன்னுடைய கவர்னருக்கும் மன்னருக்கும் புத்தி சொல்வேன் நான்' என்று வேகமுறப் பேசினேன். மானமிழந்து வாயிலிலிருந்து மறைந்தான் ஜெயிலர்.

தமிழ்ப் பெருந்துறையே! உன் தாழ்விலும் வாழ்விலும் எந்த நாளிலும் என் தமிழ்த் தாயை நான் மறந்தறியேன். இந்த நகரத்தில் வக்கீல் வேலை பார்த்து வளமுற வாழ்ந்த நாளில் வள்ளல் பாண்டித்துரையோடு உறவு கொண்டு தமிழ் நூல்களைக் கற்றேன். அதனால் நான் அடைந்த நன்மைக்கு ஓர் அளவில்லை. சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கடும்பணி புரிந்தபோது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ?

தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். இன்னிலையைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன். ஆங்கில மொழியில் ஆலன் என்பவர் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை மனம் போல் வாழ்வு என்று தமிழில் மொழிபெயர்த்தேன். உயர்ந்த நூல்களில் கண்ட உண்மைகளை இளைஞரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு மெய்யறிவு,

மெய்யறம் என்ற சிறு நூல்களை இயற்றினேன். இவற்றை என் தமிழ்த்தாயின் திருவடிகளில் கையுறையாக வைத்தேன். சிறையில் இருந்து இயற்றிய நூல்களையும் உவந்து ஏற்றுக்கொள்ளுமாறு செந்தமிழ்த்தாயின் திருவருளை வேண்டுகிறேன்.

வருங்காலப் பெருவாழ்வே! காலம் கடிது சென்றது. என் சிறைவாழ்வு முடிந்தது. இந்நகரை வந்தடைந்தேன். என் அருமைக் குழந்தைகளைக் கண்டு ஆனந்தமுற்றேன். ஆயினும் என் ஆசைக்குழந்தையை - தேசக் கப்பலை இத்துறைமுகத்தில் காணாது ஆறாத் துயருற்றேன். 'பட்ட பாடெல்லாம் பயனற்றுப் போயிற்றே' என்று பரிதவித்தேன். 'என்று வருமோ நற்காலம்' என்று ஏங்கினேன். இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்தரம் வந்தே தீரும். வீரசுதந்தர வெள்ளம் புறப்பட்டு விட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாரால் ஆகும் பாரதநாட்டிலே?

பாயக் காண்பது சுதந்திரவெள்ளம்

பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்

என்று நாம் பாடும் நாள் எந்நாளோ?' என்று உருக்கமாகப் பேசிக் கடற்கரையை விட்டு அகன்றார் வீர சிதம்பரனார்.

**நூல் வெளி**

இரா.பி.சேது தமிழறிஞர், எழுத்தாளர், வழக்குரைஞர், மேடைப் பேச்சாளர் எனப் பன்முகத் திறன் பெற்றவர். இவரைச் சொல்லின் செல்வர் எனப் போற்றுவர். செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர் இவரே என்பர். இவரது தமிழின்பம் என்னும் நூல் இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் நூல் ஆகும். ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம்- ஊரும் பேரும், மேடைப்பேச்சு உள்ளிட்ட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

வ.உ. சிதம்பரனார் பேசுவதாக அமைந்த நம் பாடப்பகுதி கடற்கரையினிலே என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

## 5. கல்யாண சுந்தரனார்

### பல்துறைக் கல்வி

அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே இளமையில் கல் என்னும் முதுமொழி பிறந்தது.

### ஏட்டுக்கல்வி

இந்நாளில் ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

### தாய்மொழி வழிக்கல்வி

நாம் தமிழ் மக்கள்; நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும் நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம். ஆனால் முதல் முதல் தாய் மொழி வாயிலாகவே

கல்வி பயிலுதல் வேண்டும். தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறப்பது.

**தமிழ்வழிக் கல்வி**

தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே; சிறப்பான அறிவியல் கலைகளில்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார். அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்து எழுதப்படுகின்றன. அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது? குறியீடுகளுக்குப் பல மொ ழிகளி னின்றும் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது. கல ப் பி ல் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம். தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவோம் என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங் காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும்.

**காப்பியக் கல்வி**

வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றும் கூறலாம். நாம் தமிழர்கள். நாம் பாட்டின்பத்தை நுகர வேண்டுமேல் நாம் எங்குச் செல்லல் வேண்டும்? தமிழ் இலக்கியங்களுக்கிடையே அன்றோ? தமிழில் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன. இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள். இத்தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது. இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு

பெற்றிருக்கிறீர்கள்! தமிழ் இன்பத்திலுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ? தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள்.

**இயற்கைக் கல்வி**

நீங்கள் ஏடு களைப் பயி ல்வதுடன் நில்லாது, ஓய்ந்த நேரங்களில் இயற்கை நிலையங்களில் புகுந்து, இயற்கைக் கழகத்தில் நின்று, இயற்கைக் கல்வி பயில்வீர்களானால், இயற்கையோடியைந்த வாழ்வு நடத்த வல்லவர்களாவீர்கள். காடு செறிந்த ஒரு மலை மீது ஏறி, ஒரு மரத்தடியில் நின்று, மண்ணையும் விண்ணையும் நோக்குங்கள். இயற்கை ஓவியத்தைக் கண்டு கண்டு மகிழுங்கள். மண் வழங்கும் பரந்த பசுமையிலும் வெண்மையிலும் விண் வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள். காலையில் இளஞாயிறு, கடலிலும் வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங்காட்சியை நெஞ்சில் எழுதுங்கள்.

அருவி முழவும் குயில் குரலும் வண்டிசையும் மயில் அகவலும் மலர் மணமும் தேனினிமையும் தென்றல் வீசலும் புலன்களுக்கு விருந்தாகும் இயற்கை அன்னையைப் பாருங்கள். ஆங்கே சூழ்ந்துள்ள செடி, கொடி மரங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் உற்றுநோக்கி, சில செடிகள் பூமியில் பரந்தும் சில செடிகள் எழுந்து நின்றும் சில கொடிகள் சுருண்டு சுருண்டு படர்ந்தும் இருப்பதற்கும், சில மரங்கட்கு நீள் கிளையும் கிளிக்கு வளைந்த மூக்கும் யானைக்குத் துதிக்கையும் மானிற்குக் கொம்பும் அமைந்திருப்பதற்கும் என்ன காரணம்? என்று சிந்தியுங்கள்.

அந்தியில் ஞாயிறு அமருங் கோலத்தையும் பறவைகள் பறந்து செல்வதையும் கால்நடைகளின் மணியோசையையும் காணுங்கள்; கேளுங்கள். இவ்வாறு, இயற்கைக் கழகத்தில் பயின்றுபயின்று சங்கப்புலவர் இளங்கோ, திருத்தக்கத்தேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எவ்வாறு எழுத்தோவியத்தில் இறக்கியிருக்கின்றனர் என்று ஆராயுங்கள். நந்தமிழ்க் காவியங்களும், ஓவியங்களும் இயற்கை அமிழ்தாய் உயிரையும் உடலையும் பேணுவதை உணர்வீர்கள்.

**இசைக்கல்வி**

இன்றைய சூழலில் இசைப்பயிற்சியும் இன்றியமையாதது. இசை பாட இயற்கை சிலருக்குத் துணை செய்யும்; சிலர்க்குத் துணை செய்வதில்லை. அத்துணை பெறாதார் இசை இன்பத்தையாதல் நுகரப் பயில்வாராக. பழைய தமிழர் இசைத்துறையின் நிலை கண்டவர் என்று ஈண்டு இறுமாந்து கூறுகிறேன். தமிழ் யாழையும் குழலையும் என்னென்று சொல்வது? அந்த முகரங்களை நினைக் கும் போதே அமிழ்தூறுகிறது. கொடிய காட்டு வேழங்களையும் பாணர் தம் யாழ் மயக்குறச் செய்யுமாம். அந்த யாழ் எங்கே? இனி இசைப் புலவர்தொகை நாட்டிற் பெருகப் பெருக நாடு பல வழியிலும் ஒழுங்கு பெறுதல் ஒருதலை. ஆகவே அத்துறை மீதும் மாணவர் கருத்துச் செலுத்துவாராக.

**நாடகக்கல்வி**

நாடகக்கல்வி வாழ்விற்கு வேண்டா என்று யான் கூறேன். இடைக்காலத்தில் நாடகக் கலையால் தீமை விளைந்தபோது அதைச் சிலர் அழிக்க முயன்றதுண்டு. இப்போதைய நாடகம் நன்னிலையில்லை என்பதை ஈண்டு விளக்க வேண்டுவதில்லை. நாடகத்துக்கு நல்வழியில் புத்துயிர் வழங்க வேண்டும். நாடகத்தை நல்வழிப்படுத்தி மாணாக்கரை அதன்கண் தலைப்படுமாறு செய்யத் தமிழ்ப் பெரியோர் முயல்வாராக..

**அறிவியல் கல்வி**

உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'அறிவியல்' என்னும் அறிவுக்கலை. உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வேண்டும். இந்நாளில் இவைகளைப் பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும். புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது. நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது. இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

**நூல் வெளி**

திரு.வி.க. என்று அனைவராலும் குறிப்பிடப்படு ம் திருவாரூர் விரு த்தாச லம் கல்யாண சுந ் த ரனா ர் அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்; சிறந்த மேடைப் பேச்சாளர்; தமிழ்த்தென்றல் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை, பொதுமை வேட்டல், முருகன் அல்லது அழகு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

இவரது இளமை விருந்து என்னும் நூலிலிருந்து சிலபகுதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்.

– விஜயலட்சுமி பண்டிட்

ஐ. நா. அவையின் முதல் பெண் தலைவர்

ஏடன்று கல்வி; சிலர் எழுதும் பேசும்
இயலன்று கல்வி; பலர்க் கெட்டா தென்னும்
வீடன்று கல்வி; ஒரு தேர்வு தந்த
விளைவன்று கல்வி; அது வளர்ச்சி வாயில்

- குலோத்துங்கன்

**6. வையாபுரி**

- பெயர் : வையாபுரிப் பிள்ளை
- பெற்றோர் : சரவணப் பெருமாள் பிள்ளை – பாப்பம்மாள்
- பிறந்த நாள் : 12.10.1891 – 1956
- ஊர் : சிக்கநரசையன், திருநெல்வேலி மாவட்டம்

**கல்வி**

கணபதி ஆசிரியரிடம் திண்ணைப் பள்ளிக் கல்வி, மீனாட்சிபுரத்தில் தொடக்க நிலைக் கல்வி, ம.தி.தா. இந்து பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு, பின் அங்கே பட்டமும் பெற்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் வரலாறு, பொருளாதாரம் பாடமாகக் கொண்டு பி.ஏ. பட்டம் பெற்றார். 1914 இல் திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டம் பெற்றார்.

**பணிகள்**

- திருவனந்தபுரம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.
- இவர் ‘செந்தமிழ்’ இதழில் பல கட்டுரைகள் எழுதினார்.
- இரண்டாவது முறையாக ‘மனோன்மணியம்’ என்னும் நூலை வெளியிட்டார்.
- ‘கம்பர் கழகம்’ என்ற ஒரு அமைப்பை அமைத்து இலக்கியத் தொண்டாற்றினார்.
- சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராக 1936 ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டார்.
- சென்னைப் பல்கலைக் கழகத்தில் அகராதி தயாரிக்கும் பணியை ஏற்றுக் கொண்டு ஐந்து தொகுதிகளை வெளியிட்டார்.
- தமிழக அரசு இருவருக்கு ‘இராவ் சாகிப்’ என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
- 1946 இல் கீழ்க்கலை மாநாட்டில் திராவிட மொழிக்கு தலைமை தாங்கி ஆராய்ச்சித் துறையின் வகையும் வளர்ச்சியும் பற்றி ‘திரவிட மொழிகளில் ஆராய்ச்சி’ என்னும் ஆங்கிலப் பேருரை நிகழ்த்தினார்.
- தமிழ் மொழி மட்டுமின்றி ஆங்கிலம், வடமொழி, மலையாளம், பிரெஞ்சு,ஜெர்மன் ஆகிய மொழிகளில் புலமை பெற்றதனால் பிறமொழி இலக்கிய
- வளர்ச்சியினையும், காவியங்களையும் பற்றிய புத்தகங்களை எழுதினார்.

- தமிழ் இலக்கிய சரிதத்தை முற்சங்க காலம், தொகை செய்காலம், பிற்சங்க காலம், பக்திநூற் காலம், நீதி நூற்காலம், முற்காவியம், பிற்காவியம், தற்காலம் எனப் பகுத்துக் கூறியவர் இவரே.
- வையாபுரியார் ஆய்வுத்துறையின் முன்னோடி 'அன்னைத்தமிழ் அரும் பணியாளர்' என்று பாராட்டப்பட்டவர்.
- இவர் தம் நூலகத்தில் 5000 புத்தகங்கள் அறிவுக் கரு நூல்களாக இருந்தன. அவை அனைத்தையும் கல்கத்தா தேசிய நூலகத்திற்கு வழங்கினார்.
- 1951-54 வரை திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணி புரிந்தார்.

**இயற்றிய நூல்கள்**

1. கம்பன் காவியம்
2. இலக்கிய தீபம்
3. இலக்கிய உதயம்
4. இலக்கிய சிந்தனைகள்
5. சொற்கலை விருந்து
6. காவிய காலம்
7. தமிழ்ச் சுடர்மணிகள்
8. தமிழர் பண்பாடு
9. இலக்கணச் சிந்தனைகள்
10. உலக இலக்கியங்கள்
11. மாணிக்க வாசகர் காலம்
12. பத்துப் பாட்டின் காலநிலை
13. பவணந்தி காலம்
14. வள்ளுவர் காலம்
15. அகராதி நினைவுகள்
16. இலக்கிய மண்டபக் கட்டுரைகள்

**கவிதை நூல்கள்**

1. என் செல்வங்கள்
2. என் செய்வேன்
3. மெலிவு ஏன்
4. விளையுமிடம்
5. என்ன வாழ்க்கை
6. பிரிவு
7. தமிழ்ச் சுடர்மணிகள்
8. தமிழர் பண்பாடு
9. இலக்கணச் சிந்தனைகள்
10. உலக இலக்கியங்கள்
11. மாணிக்க வாசகர் காலம்
12. பத்துப் பாட்டின் காலநிலை
13. பவணந்தி காலம்
14. வள்ளுவர் காலம்
15. அகராதி நினைவுகள்
16. இலக்கிய மண்டபக் கட்டுரைகள்

**பதிப்பித்த நூல்கள்**

திருமந்திரம்

2. கம்பராமாயணயம்
3. பால காண்டம்
4. யுத்த காண்டம்
5. நாமதீப நிகண்டு
6. அரும்பொருள் விளக்க நிகண்டு
7. தொல்காப்பியம் இளம்பூரணர் உரை
8. நச்சினார்க்கினியர் உரை
9. களவியற்காரிகை
10. தினகர வெண்பா
11. பூகோள விலாசம்

12. புறத்திரட்டு
13. எட்டுத்தொகை
14. பத்துப்பாட்டு
15. சீவக சிந்தாமணி
16. சிறுபஞ்ச மூலம்
17. நான்மணிக்கடிகை
18. திரிகடுகம்
19. இன்னா நாற்பது
20. இனியவை நாற்பது
21. பழமொழி
22. திவ்ய பிரபந்தம்
23. சீறாப்புராணம்
24. நவநீதப் பாட்டியல்
25. நெல்விடு தூது
26. இராசராசத் தேவர் உலா
27. தெய்வச்சிலையார்
28. விறலிவிடு தூது முதலிய நூல்கள் ஆகும்.

**7. தனிநாயகம் அடிகள்**

உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் இயல்பு. இது இருபதாம் நூற்றாண்டில் வானூர்திப் போக்குவரத்து வளர்ந்த பின்பு தோன்றியதோர் பண்பு என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்களிலேயே தமிழ்ப்புலவர்களால் இப்பண்பு பாராட்டிப் பாடப்பட்டுள்ளது. அக்காலத்திலேயே ஒரு நாட்டவர் பிற நாட்டவரோடு உறவு பாராட்ட விரு ம்பியுள்ளனர். இதனைக் கீழ்க்காணும் இரு செய்யுள்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்னும் கொள்கை எல்லா நூற்றாண்டுகளுக்கும் பொருத்தமாக உள்ளது.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்

சாந்துணையும் கல்லாத வாறு (குறள்.397)

என்னும் திருக்குறள், முன்பு எப்போதையும்விட நம் காலத்திற்குப் பொருத்தமான அறிவுரையாக விளங்குகின்றது.

மேற்கண்ட பாடல்களில் ஆளப்பட்டுள்ள 'ஊர்', 'நாடு', 'கேளிர்' என்னும் தமிழ்ச்சொற்கள் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பொருண்மைகளைக் கொண்டிருக்கலாம்.

ஆயினும், இம்மேற்கோள்கள் காட்டும் பரந்த ஆளுமையும் (personality) மனித நலக் கோட்பாடும் (humanism) இலத்தீன் புலவர் தெறென்ஸ் (Terence) கூறிய கூற்றுடன் ஒப்பிடத்தக்கவை ஆகும். "நான் மனிதன்; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று" என்பதே அவரது கூற்று.

மூன்று இலக்கணங்கள்

முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதவை என்கிறார் கோர்டன் ஆல்போர்ட் (Gordon Allport) என்னும் உளநூல் வல்லுநர். முதலாவதாக மனிதன், தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவ னாக இருத்தல் வேண்டும்; பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக்கூடிய வகையில் தன் ஆளுமையை வி ரிவடையச் செய்து செழுமைப்படு த்த வேண்டும். இரண்டாவதாக, ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும் (self objectification). மூன்றாவதாக அவனது வாழ்க்கைக்குத் தன் ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும் (unifying philosophy of life-self-unification).

இலட்சியங்களைக் கடைப்பிடித்தும் கற்பித்தும் வருவதால் தான் சமுதாயம் முன்னேற்றம் அடைகிறது. அது மக்களுக்கு வேண்டிய இன்பத்தையும் சீர்திருத்தத்தையும் அளிக்கின்றது. குறிக்கோள் இல்லாத சமுதாயம் வீழ்ச்சி அடையும் என்னும் உண்மையைப் பண்டைக் காலத் தமிழரும் நன்கு உணர்ந்திருந்தனர். குறிக்கோள் இல்லாதவன் வெறும் சதைப் பிண்டம் என்பதைப்

"பூட்கையில்லோன் யாக்கை போல" (புறம். 69) என்னும் அடியில் புலவர் ஆலத்தூர்கிழார் நிலைநாட்டுகிறார்.

**பிறர் நலவியல்**

விரிவாகும் ஆளுமையை உருவாக்கும் நோக்கம் கொண்டுள்ள மக்கள் சமுதாயமே இன்பத்தை அளிக்கும் சமுதாயமாகக் காணப்படும். எந்த அளவிற்குப் பிறர் நலத்திற்காக மனிதன் பாடுபடுகின்றானோ அந்த அளவிற்கு அவனது ஆளுமை வளரும். பிறருக்காகப் பணி செய்வதால்தான் ஒருவனுடைய வாழ்க்கை, பண்புடைய வாழ்க்கை ஆகின்றது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் குறிக்கோள், வாழ்க்கையைத் தன்னலம் தேடுவதிலிருந்து விடுவித்து ஆளுமையை முழுமைப்படுத்தும் பண்பாக ஆக்குகின்றது.

பிறர் நலவியல் (Altruism) என்னும் பண்பு, மக்கள் வரலாற்றில் படிப்படியாகத்தான் தோன்றும். மேம்படாத சமுதாயத்தில் மனிதன் தன்னுடைய குடும்பத்தையும் தன் இனத்தையும் (tribe) காப்பாற்றவே முயல்வான். படிப்படியாக அறிவு வளர வளர எங்கு வாழ்ந்தாலும் மக்கள் அனைவரும் தன் இனத்தவர்; எல்லா உயிர்க்கும் அன்புகாட்டுதல் வேண்டும் என்னும் சிந்தனை அவனுக்குத் தோன்றும்.

வெவ்வேறு பண்பாடுகள் வெவ்வேறு காலத்தில் பிறர் நலவி யலைக் கற் பித்து வந்திருக்கின்றன. சீனநாட்டில் பொ.ஆ.மு. 604ஆம் ஆண்டில் பிறந்த லாவோட்சும் (Lao-Tse) அவருக்குப் பின்பு கன்பூசியசும் (Confucius பொ.ஆ.மு. 551-479) தம் காலத்திலேயே இந்தக் கொள்கையை ஒருவாறு தெளிவாகக் கற்பித்துள்ளனர். ஆனால், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்கத் தத்துவ ஞானிகள் கிரேக்கக் குடியினரை மட்டுமே தம் சிந்தனைக்கு உட்படுத்தினர்.

பண்டைக்கால தருமசாத்திர நூல்களும் பிறரைக் கவனத்தில் கொள்ளவில்லை. 'விந்திய மலைத்தொடருக்கும் இமயமலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே கருமபூமி; வீடுபேறு அடைவதற்கு அப்பூமியிலே பிறந்திருக்க வேண்டும்' என்பதே அவற்றின் கருத்தாக இருந்தது.

தமிழ் மக்களிடமோ, ஸ்டாயிக்வாதிகள் கூறியது போல 'மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்; பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது' என்னும் நம்பிக்கை பண்டுதொட்டே நிலவியுள்ளது. இந்திய வரலாற்றில் பண்டைக் காலத்திலேயே இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் மக்கள் கடைப்பிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது. ஒழுக்கவியலை (Ethics) நன்க றிந்து எழுதிய உலகமேதை ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும்போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது" என்பார். ஆனால், இத்தகைய கொள்கைகள் திருவள்ளுவர் காலத்திற்கும் முன்பே தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ளன.

**ஒற்றுமை உணர்ச்சி**

தமிழ் இலக்கியத்தை ஆராயும்போது, பிறர் நலக்கொள்கையையும் பிறர் மீதான அன்பு பாராட்டலையும் முதன் முதலில் பரப்புவதற்குக் காரணமாய் இருந்தவர்கள் தமிழ்நாட்டுப் பாணரும் புலவருமே ஆவர் என்பதை அறிய முடிகிறது. பாணர்க்கும் புலவர்க்கும் சொந்த ஊரும் நாடும் உண்டு. ஆயினும், அவர்கள் தமிழ் வழங்கும் இடமெங்கும் சென்று அரசர்களையும் வள்ளல்களையும் மக்களையும் வாழ்த்தி வந்ததால் 'தமிழகம்' என்ற ஒற்றுமை உணர்வு உண்டானது. அம்மொழி பரவிய நிலம் அனைத்தையும் "தமிழகம்" என்றும் "தமிழ்நாடு" என்றும் வாழ்த்தினர்.

பிறநாடுகளைக் குறிப்பிடும் போது வேற்று நாடு, பிறநாடு என்று குறிக்காது மொழிமாறும் நாடு – மொழிபெயர் தேயம் – என்றே வரையறுத்துக் கூறியுள்ளனர்.

**இலக்கணத்தில் பரந்த மனப்பான்மை**

அகத்திணை இலக்கியம் பல்வேறு வழிகளில் பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் வளர்த்தது. ஐவகை நிலங்களின் பெரும்பொழுது, சிறுபொழுது, கருப்பொருள் ஆகியவற்றைப் புலவரும் பாணரும் இலக்கியம் பயில்வோரும் தவறாது கற்றுவந்தனர். தொல்காப்பியர் நிலத்தைப் பிரித்தமுறை உலகின் பிரிவாகவே அமைந்தது.

படுதிரை வையம் பாத்திய பண்பே –

(தொல். 948)

களவொழுக்கத்திலும் கற்பொழுக்கத்திலும் பிற உயிரொன்றைக் காதலிப்பதாலும் குழந்தைகளைப் பேணுவதா லும் இருவருடைய ஆளுமையும் இன்னும் விரிவடைய வாய்ப்பிருந்தது. புலவர்கள் தம் செய்யுள்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய் ஆகியோரைக் கற்பனை செய்து பாடுவதால் பிறர் பற்றி அறியும் பண்பை அவர்கள் எளிதாகப் பெற்றிருக்க வேண்டும்.

**நன்மை நன்மைக்காகவே**

அன்பு வாழ்க்கை யிலும் பிறருடன் கலந்து வாழும் முறைகளிலும் பிறர்நலம் பேணுவ திலும் தமிழ்ப் பண்பாட்டின் இன்றியமையாத கொள்கை உருப்பெறுகிறது. கடையெழு வள்ளல்களுள் ஒருவரான ஆய் என்பவரைப் போற்றுவதற்குக் காரணம் அவர், நன்மையை நன்மைக்காகவே செய்ததுதான். பிறர் போற் றுவார்கள் என்றோ வேறு நலன்களைப் பெறலாம் என்றோ அவர் நன்மைகளைச் செய்யவில்லை.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்

அறவிலை வணிகன் ஆய் அலன்

- புறம். 134 (அடி 1 - 2)

பிறர்க்காக வாழும் மக்கள் இவ்வுலகில் இல்லையென்றால், நாம் வாழ்வது அரிது. பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும். "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறப்பாட்டு இந்தப் பண்பை அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

பண்புடைமை என்னும் அதிகாரத்திற்கு உரை கண்ட பரிப்பெருமாள் பின்வருமாறு கூறியுள்ளார்: "பண்புடைமையாவது யாவர்மாட்டும் அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும் பகுத்து உண்டலும் பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை".

**இமயவரம்பு**

இதுவரை வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் விரிவான ஆளுமையின் வளர்ச்சியைக் கண்டோம். ஆனால், தமிழ் ஈடுபாடு, தமிழகத்தோடு நிற்கவில்லை.

வட இந்தியாவுடன் தொடர்புகள் வளர வளரக் கங்கையும் இமயமும் அடிக்கடி தொகைநூல்களில் எடுத்தாளப்பட்டன. இமயமலை, நீடிக்கும் உறுதிக்கு மேற்கோளாகக் காட்டப்படுகின்றது.

இமயத்துக்

கோடு உயர்ந்தன்ன தம் இசை நட்டுத்

தீது இல் யாக்கையொடு மாய்தல்

தவத்தலையே

(புறம். 214, 11-13)

புலவர்கள் குமரி ஆறு, காவிரி ஆறு போன்ற மணல் நிறைந்த இடங்களை நீண்ட வாழ்க்கைக்கு உவமையாகக் கூறுகிறார்கள். அத்துடன் கங்கையையும் இமயத்தில் பெய்யும் மழையையும் உவமையாகச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

“இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்

கொண்டல் மாமழை பொழிந்த

நுண்பல் துளியினும் வாழிய பலவே”.

- புறம் 34 (அடி 21-23)

சில புலவர்கள் இமயத்தையும் கங்கையையும் தமிழ்நாட்டு மலைகளுடனும் ஆறுகளுடனும் சேர்த்தே பாடுகின்றனர்.

ஒவ்வொருவரும் சான்றோர் ஆகலாம்

திருக்குறளில் பூட்கைமகன் அல்லது குறிக்கோள் மாந்தனின் இயல்புகள் பல கூறப்பட்டிருக்கின்றன. ஒன்று பிறர்பால் அன்புடைமை ஆகும். இல்லற

வாழ்க்கையின் நோக்கம் ஈகை, விருந்தோம்பல் போன்ற பண்புகளால் ஆளுமையை வளர்த்தல் ஆகும்.

தமிழ் மக்கள் “சான்றோன்” எனப்படும் குறிக்கோள் மாந்தனைப் பாராட்டிய காலத்தில் இத்தாலிய நாட்டில் உரோமையர் “sapens” (அறிவுடையோன்) எனப்படும் இலட்சிய புருஷனைப் போற்றி வந்தனர். உரோமையருடைய “சாப்பியன்ஸ்” அல்லது சான்றோன் என்பவன் சமுதாயத்திலிருந்து விலகி, தன் சொந்தப் பண்பு களையே வளர்ப்பனாக இருந்தான். உரோமையருடைய சான்றோர் அரிதாகவே சமுதாயத்தில் தோன்றுவர்.

ஸ்டாயிக்வாதிகளின்படி அவர்களுடைய இலட்சிய மனிதர்கள் ஒரு சிலரே. அச்சிலர் தனிமையாகத் தம் இல்லங்களில் வாழ்ந்து வருவர். திருக்குறளின் சான்றோரோ பலர். பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நட்பு முதலான அதிகாரங்களில் இச்சான்றோனுடைய இயல்புகள் எல்லாம் சொல்லப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் சான்றோன் ஆதல் கூடும். அவனை அவ்வாறு ஆக்குவதே கல்வியின் நோக்கம். ஒவ்வொரு தாயும் தன் மகன் சான்றோன் ஆக வேண்டும் என்றே எதிர்பார்ப்பாள். தன் பிள்ளையைச் சான்றோன் ஆக்குதல் ஒவ்வொரு தந்தைக்கும் கடனாகும்.

தமிழ்ச் சான்றோன் சமுதாயத்திலேயே வாழ்ந்து தன்னால் இயன்றவரை சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்வான். பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழனுக்குக் கூறியது போலத் தமிழ்ச் சான்றோர் பலர் வாழும் ஊரே வாழ்க்கைக்கு இன்பத்தைத் தருவதாகும் (புறம் 191).

**ஒன்றே உலகம்**

உரோம நாட்டுச் சிந்தனையாளர்களும் ஏறத்தாழத் தமிழ்ப் புலவர்களைப் போல அதே காலத்தில் ஒன்றே உலகம் என்ற கொள்கையைப் பாராட்டி வந்தனர். ஸ்டாயிக்வாதிகள் உலகில் ஒற்றுமை உண்டு என்றும், மக்கள் அனைவரும் ஒரே குலத்தவர் என்றும், எல்லா உயிர்களும் தொடர்பால் இணைக்கப்பட்டுள்ளன என்றும் கற்பித்தனர். ஒன்றே உலகம் என்ற மனப்பான்மையும் கொள்கையும் முதன்முதல் மேலை நாட்டில் ஸ்டாயிக்வாதிகளால் போற்றப்பட்டது.

செனக்கா என்னும் தத்துவ ஞானி கூறியதாவது: ‘எல்லாருடைய நாடுகளும் நமக்குத் தாய் நாடு என்றும், நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய் நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்”.

மார்க்ஸ் அரேலியஸ் என்னும் பேரரசர் கூறியதாவது: “நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்; நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன்” இவ்வாறு உலக மாந்தரின் ஒற்றுமைத்தன்மை மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் மக்கட்தன்மையை வளர்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூல் திருக்குறள். ஜி.யு. போப் திருவள்ளுவரை “உலகப் புலவர்“ என்று போற்றுவது மிகவும் பொருத்தமானதாகும்.

மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவர் என்று கருதுவதோடு உயிர்கள் அனைத்தையும் மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று கருதும் பண்பும் திருக்குறளுக்கும் ஸ்டாயிக் வாதிகளுக்கும் பொதுவான ஒரு தன்மை.

உரோம நாட்டவர் எழுதும்போது “நாம்”, “நம்மவர்” என்ற செருக்கோடு உரோமரைக் கருதியே எழுதுகின்றனர். வள்ளுவரோ எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் வகையில் உலகமெல்லாம் தழுவுவதற்குரிய பான்மையில் தம் நூலை யாத்துள்ளார்.

**விரிவாகும் ஆளுமை**

இறுதியில், அன்பர்களே, திருவள்ளுவரின் கூற்றுடன் இவ்விரிவுரையை முடிக்க விரும்புகின்றேன். விரிவாகும் ஆளுமையைப் பற்றி ஒரு சில உண்மைகளைக் கண்டோம். திருவள்ளுவரோ இரண்டு அறவுரைகளில் இந்தக் குறிக்கோளை எவ்வாறு அடையலாம் என்று காட்டியுள்ளார். “உள்ளற்க உள்ளம் சிறுகுவ” (798) என்றும் ”உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்” (596) என்றும் கற்பித்துள்ளார்.

**நூல் வெளி**

தமிழுக்குத் தொண்டாற்றிய கிறித்துவப் பெரியார்களுள் தனிநாயகம் அடிகள் குறிப்பிடத்தக்கவர். அடிகளாரின் சொற்பொழிவுகள் தமிழர் புகழைப் பரப்பும் குறிக்கோளைக் கொண்டவை. இலங்கையில் யாழ்ப் பல்கலைக்கழகத்தில் அவர்

ஆற்றிய பஸ்கர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு, பாடமாக இடம்பெற்றுள்ளது. தம் சொற்பொழிவு வாயிலாக உலகம் முழுவதும் தமிழின் புகழைப் பரப்பினார். அகில உலகத் தமிழாய்வு மன்றம் உருவாகவும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் உருவாகவும் இவர் காரணமாக இருந்தார். இவர் தொடங்கிய தமிழ்ப் பண்பாடு என்ற இதழ் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கிறது.

**8. கா.ப.செய்குதம்பிப் பாவலர்**

**நீதிவெண்பா**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று. *

**பாடலின் பொருள்**

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.

**நூல் வெளி**

'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங் கிய செய்குதம்பிப் பாவலர் (1874 – 1950), கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்; பதினைந்து வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றவர்; சீறாப் புராணத்திற்கு உரை எழுதியவர்; 1907 மார்ச் 10ஆம் நாளில் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி 'சதாவதானி' என்று பாராட்டுப்பெற்றார். இவர் நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் மணிமண்டப மும் பள்ளியும் உள்ளன. இவரது அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

**சதாவதானம்**

**‘சதம்’ என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.**